DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------
IN THE COURT OF PRINCIPAL DISTRICIT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUPPATHUR

Calender CC. 118/2016
Miscellaneous:
Preliminary Register Prosecution: PW-3
Sessions
Deposition of witness for

| | |
|---|---|
| பெயர்: இந்திரா | த-பெ.: |
| ஊர்: | க-பெ.: தமிழரசன் |
| ஜாதி: | வட்டம்: |
| சமயம்: | தொழில்: |
| | வயது: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the day of 19.03.2024

1-வது எதிரி ஆஜா, 2, 4 எதிரிகள் ஆஜரில்லை அவர்களுக்கு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

நீ வாழாவெட்டிய வந்திருக்கிற உனக்கு எதுக்குடி சொத்து என்று எதிரிகள் என்னுடைய மகளை சத்தம் போட்டதாக போலீஸ் விசாரணையில் கூறியிருக்கிறேன். இந்த வழக்கில் 3-வது எதிரி என்னுடைய கணவரின் தங்கையாகும். 3-வது எதிரியின் கணவர் தான் 1-வது எதிரி என்று சொன்னால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை காரணமாக பேச்சுவார்த்தை கிடையாது என்று சொன்னால் சரிதான். நானும் என்னுடைய கணவரும் கற்றாலம்களம் செல்லும்போது மாலை சுமார் 5.00 மணியிருக்கும். புகாரினை நான் தான் எழுதினேன். எங்களுடைய ஊருக்கும் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 2, 3 மைல் தூரம் இருக்கும். சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 4, 5 மைல் தூரம் இருக்கும். கற்றாலம்களத்திலிருந்து நேரடியாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். நாங்கள் ஆட்டோவில் மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் கற்றாலகளத்திலிருந்து

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNSV0A0003852016-orderno-1.pdf

மருத்துவமனைக்கு சுமார் மாலை 6.30 மணிக்கு கிளம்பினோம். மருத்துவமனைக்கு சென்ற போது சுமார் 7.00 முதல் 7.30 மணியிருக்கும். போலீசார் மறுநாள் தான் மருததுவமனைக்கு வந்து விசாரித்தார்கள். போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். புகாரில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் தான் என்னுடைய கணவரையும் மகளையும் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றேன். நான் மருவத்துவ விசாரணையில் யாரால் எப்போது எங்கு வைத்து காயம் ஏற்பட்டது என்பதை கூறியிருக்கிறேன். என்னுடைய கணவர் மற்றும் மகள் 1 வாரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். சுமார் 10 வருடங்களாக எதிரிகளும் நாங்களும் பேசிகொள்வதில்லை. மருத்துவமனையில் இருக்கும் போது மீண்டும் வந்து போலீசார் விசாரித்தார்கள். ஆனால் கையொப்பம் வாங்கவில்லை. சுமார் 30, 40 ஏக்கர் நிலங்கள் வளநாடு கால்வாய் பாசனம் என்று சொன்னால் சரிதான். அதனை வளநாடு வயல்கள் என்று சொல்லுவார்கள். சம்பவயிடத்தை சகடதட்டி நிலம் என கூறுவார்கள். கற்றாலகளத்திற்கும் சகடதட்டி நிலத்திற்கும் சுமார் 11/2 கீ.மீ தூரம் இருக்கும். சம்பவயிடத்திற்கு வடக்கே கிழமேல் கால்வாயும் முத்துராமன் நிலம், மேற்கே முத்துசுப்பிரமணியம் அம்பலம் நிலமும், கிழக்கே முத்துராமன், மலையாண்டி நிலமும், தெற்கே முத்தாண்டி ராமையா நிலம் உள்ளது. கற்றாலகளத்திற்கு கிழக்கு பக்கம் மாட்டு தொழுவம் உள்ளது. மாட்டுதொழுவம் முழுவதும் கம்பிவேலி போடப்பட்டுள்ளது. கற்றாலகளத்திற்கும் மாட்டுதொழவத்திற்கும் இடையே சிமெண்ட் பாதை வழியாக தான் வயல்களக்கு சொல்லவேண்டும். என்னுடைய கணவரின் சட்டையில் ரத்தம் படிந்திருந்து. மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன். ரத்தம் படிந்த சட்டையை போலீசார் கைபற்றினார்களா என்பது ஞாபகமில்லை. சம்பவயிடத்தின் சர்வே எண். 170/1 என்றால் எனக்கு தெரியவில்லை. சம்பவயிடம் குறித்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிரிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளதா என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணயில் கூறியுள்ளபடி எவ்வித வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNSV0A0003852016-orderno-1.pdf

எதிரிகள் அசிங்கமாக பேசி என்னுடைய கணவரையோ மகளையோ அடித்து காயம் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்து பிரச்சனை காணரமாக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கணவர் கற்றாலகளத்திற்கு எதிரே உள்ள கம்பி வேலியில் தடுமாறி விழ்ததாலும், என் மகள் வரப்பில் தடுமாறி விழுந்ததாலும்காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி அரசு மற்றும் எதிரி தரப்பு மற்றும் வழக்குரைஞர்களுக்கு முன்னால் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருப்பத்தூர்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNSV0A0003852016-orderno-1.pdf